பக்கங்கள் 14

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 20 வியாழக்கிழமை 07.12.2023 அதிர்வு 129

## வவுனியாவில் வாள்வெட்டு; இரு சகோதரர்கள் படுகாயம்

(வவுனியா நிருபர்)



வவுனியா, ஓயார்சின் னக்குளம் பகுதியில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்ப வத்தில் இருவர் படுகாய மடைந்த நிலையில் 04



# வடக்கு, கிழக்கில் ஆக்கிரமிப்பின் அடையாளமாக புத்த பகவான்



## இன, மத, மொழி அடையாளங்களுடன் தமிழர்களை வாழ விடுங்கள் என்று சபையில் சார்ள்ஸ் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

"பல நாடுகளில் புத்த பகவான் அமைதியின் சின்னமாக வணங்கப் படும் நிலையில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் புத்த பகவான் எங்களின் நிலங்களைப் பறிக்கின்ற, எங் களின் மத அடையாளங்களை அழிக்கின்ற, காணி பிடிப்பதற் கான ஆக்கிரமிப்பின் அடை யாளமாக பயன்படுத்தப்படுகின் றார்." 04

## வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவில் பெண்கள் இன்று பேரணி



(கி.வசந்தரூபன்)

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கு மாறு வலியுறுத்தி வவுனியாவில் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் இன்று காலை 04

## வடிவேல் சுரேஷுக்கு ஜீவன் வாழ்த்து மழை



ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசக ராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளு மன்ற உறுப்பினர் 04

## பெண்ணின் நிர்வாணப் புகைப்படத்தை பேஸ்புக்கில் பதிவிட்ட நபருக்கு 2 வருட கடூழியச் சிறைத்தண்டனை



(வி.ரி. சகாதேவராஜா)

பெண்ணின் நிர்வாணப் புகைப் படத்தை பேஸ்புக்கில் கணக்கில் பதி விட்ட குற்றச்சாட்டின் பெயரில் சந்தேக நபருக்கு அக்கரைப்பற்று நீதிவான் இரண்டு வருட கடூழியச் சிறைத் தண் டனையை விதித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணால் இலங்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டுக்கு அமைவாக அந்தச் சந்தேகநபரை 04

# மக்களுக்கு பங்கம் விளைவிப்போர் பொலிஸாரால் கைது செய்யப்படுவர்!

## யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் எச்சரிக்கை

(எஸ். நிதர்ஷன்)

பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பொலிஸாரின் கடமை. எனவே பொது மக்களுக்கு பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவார்கள்.

யாழ். மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் இவ்வாறு தெரிவித்தார்.

தெல்லிப்பளையில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் கருத் துரைக்கும் போது இவ்வாறு தெரி வித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்படுகின்றனர்.

தெல்லிப்பளையில் இடம்பெற்ற சம்பவம் போல் யாழ்ப்பாண மாவட்டத் தில் அவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெற அனுமதிக்க முடியாது.

எனினும் சம்பவத்துடன் தொடர்பு டையவர்களை 48 மணி நேரத்துக்குள் யாழ். மாவட்டக் குற்றத் தடுப்பு பிரிவினர் மற்றும் ஏனைய பொலிஸ் பிரிவினர் இணைந்து கைது செய்துள்ளனர். சம் பந்தப்பட்ட வாகனத்தையும் மீட்டுள்ள னர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்பு டையவர்கள் எனக் கருதப்படுவோர் பொலிஸாரால் தொடர்ச்சியாகக் கண்



காணிக்கப்பட்டு வருகின்றனர்.

சில குழுவினரிடையே இருந்துவரும் பகைமையின் காரணமாகவே தற்போ தைய வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாகத் தெல்லிப்பளை சம்பவம் கூட ஏற்கனவே இரு குழுக்களுக்கிடேயே உள்ள முரண்பாட்டுக்குப் பழி தீர்க்கும் முகமாகவே இடம்பெற்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஏதாவது குற்ற செயல்கள் இடம் பெற்றால் அவ்வாறான சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யக் கூடியதாகவுள்ளது.

அதே போல யாழ்ப்பாண மாவட்டத் தில் கூலிக்கு அமர்த்தி வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவதை இனியும் அனுமதிக்க மாட்டோம். அவ்வாறு யாராவது ஈடுபட்டால் அவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் முற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை நாம் முன்னெடுத்துள்ளோம். பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பொலிஸாரின் கடமை. எனவே பொது மக்களுக்குப் பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவார்கள்.

பொது மக்கள் இந்த விடயங்கள் தொடர்பில் அச்சமடைய தேவையில்லை. சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு யாழ்ப்பாணத்தில் பொலிஸார் தொடர்ச்சியான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.-என்றார்.

# போதைப்பொருளைக் கடத்திய இளைஞனுக்கு விளக்கமறியல்

(பாறுக் ஷிஹான்)

பாடசாலை மாணவர்கள், இளைஞர் களுக்கு நீண்ட காலமாகப் போதைப் பொருள்களை விநியோகித்து வந்த ஆலா என்ற இளைஞனை விளக்கமறி யலில் வைக்குமாறு கல்முனை நீதி வான் நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த திங்கட்கிழமை (4) இரவு விசேட தகவல் ஒன்றை அடுத்து அம் பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே. வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸ் குழுவினர் மருதமுனை கடற்கரை பிர தேசத்தில் சிவில் உடையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது 39 வயதுடைய இளை ஞனை பொலிஸார் சுற்றி வளைத் துள்ளனர். இவ்வாறு சுற்றி வளைக்



கப்பட்ட இளைஞன் தடுமாறிய நிலை யில் அருகில் உள்ள கடலுக்குள் பாய்ந்து தப்பி செல்ல முயற்சித்தார்.

இந்நிலையில் நீச்சல் தெரியாது திணறிய இளைஞனை கைது செய்த பொலிஸ் குழு 100 கிராம் கஞ்சாவை உடைமையில் இருந்து மீட்டது.

பின்னர் மறுநாள் செவ்வாய்க் கிழமை (5) சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ். எம் சம்சுதீன் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 15 ஆந் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# எரிபொருள் விநியோக நடவடிக்கைக்கு மூன்று நிறுவனங்களுக்கு அனுமதி!

எரிபொருள் தட்டுப்பாட்டை தவிர்க்கும் நோக்கிலேயே 3 நிறுவனங்களுக்கு போட்டித் தன்மையுடன் எரிபொருள் விநியோக நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனினும், உடனடியாக எரிபொருள் விலை வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியாது.

அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு நிறுவனங்கள் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்த உடனேயே போட்டித் தன்மை ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

எவ்வாறிருப்பினும் எதிர்காலத்தில் இதனால் சிறந்த பலன் கிடைக்கும். காரணம் எரிபொருள்களை இறக்குமதி செய்வதில் காணப்பட்ட சிக்கல் நிலைமை தற்போது குறைவடைந்துள்ளது.




பெட்ரோலியக் கூட்டுத்தாபனமும், ஐ.ஓ.சியும் மாத்திரம் எரிபொருள்களை இறக்குமதி செய்தபோது, ஒரு கட்டத்தில் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்கு டொலர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. இதனால் முழு நாட்டிலும் எரிபொருள் அற்ற நிலைமை கூட ஏற்பட்டது.

இவ்வாறான நிலைமை இனி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே 3 நிறுவனங்களுக்கு, போட்டித் தன்மையுடன் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் எரிபொருள்களின் விலைகளை இவற்றை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்க முடியாது. உலக சந்தை நிலவரம் மற்றும் டொலரின் பெறுமதி என்பவற்றின் அடிப்படையிலேயே எரிபொருள்களின் விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன. இவற்றுக்கு அப்பால் சென்று எரிபொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியாது.- என்று குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கு மாகாண ஆளுநர் ஆதிவாசிகள் கிராமத்துக்கு

(ஹஸ்பர்)

மட்டக்களப்பு வாகரை ஆதிவாசிகள் கிராமத்துக்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் ஆதிவாசிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்தார்.

வாகரையில் உள்ள ஆதிவாசிகள் தங்களுடைய கிராமத்தில் பல வருட காலமாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருப்பதாக தெரிவித்தனர்.

தங்களுடைய கிராமத்தில் உள்ள பாடசாலைகளில் கணித ,விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது ஆதலால் மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு தள்ளப்படுகின்றனர் எனவும், கிராமத்துக்கான பாதைகள் கடும் மோசமான நிலையில் உள்ளதாகவும், வைத்தியசாலைக்கு உதவியாளர்களை நியமித்து தருமாறும் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஆதிவாசிகளின் கோரிக்கையின் பிரகாரம் 24 மணித்தியாலத்தில் மாகாண கல்வி அமைச்சின் ஊடாக 2 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.



பாதை புனரமைப்பதற்கான நடவடிக்கையும், வைத்திய சாலைக்கு உதவியாளர் நியமிப்பதற்கான நடவடிக்கையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு ஆளுநரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# ஹட்டன் வலயத்துக்குப் புதிய பணிப்பாளர்

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக ரட்ணசாமி விஜேந்திரன் கடமையேற்றுள்ளார்.

மலையகத்தின் தலை சிறந்த கல்வி ஆளுமைகளில் ஒருவரான விஜேந்திரன் ஆசிரியராக, அதிபராக, கல்வி ஆலோசகராக, உதவி வலயக் கல்வி பணிப்பாளராக மலையக கல்வி துறைக்கு பல சேவைகளை ஆற்றியுள்ளார்.

இவர் பல கல்விமான்களையும் உருவாக்கியுள்ளார். தற்போது ஹட்டன் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக கடமையேற்றுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வன்முறைகளுக்கு...**

ஆரம்பமான இந்தப் பேரணி கண்டி வீதி வழியாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து மாவட்ட செயலகம் வரை சென்றடைந்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பெண்கள்,

“பெண்களுக்கு எதிரான வன்முறையை இல்லாது ஒழிக்கும் பொருட்டு நவம்பர் 25 முதல் டிசம்பர் 10 வரையான 16 நாட்கள் செயல்வாத விழிப்புணர்வு ஒன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். குறிப்பாக உலகில் அதிகமான வன்முறைகளுக்கு உள்ளாகும் தரப்பாக பெண்களே உள்ளனர். அவர்களுக்கான உதவிகள் கிடைக்கப் பெறாத நிலையில் வீட்டினுள்ளே முடங்கிக் கிடக்கும் நிலை தற்போது காணப்படுகின்றது. எனவே, வன்முறைகளைத் தடுத்து அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு முன்னுரிமை கிடைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.” – என்றனர்.

பேரணியில் ஈடுபட்டவர்கள், “ஆணும் பெண்ணும் இவ்வுலகில் சமமே”, “பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை இல்லாது ஒழிப்போம்” போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

---

**பெண்ணின்...**

கைது செய்து அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணைகளின் போது குற்றத்தை ஏற்றுக்கொண்ட சந்தேக நபருக்கு இன்று இரண்டு வருட கால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அக்கரைப்பற்று நீதிவான் எம்.எச்.எம். ஹம்சா இந்தத் தண்டனையை விதித்தார்.

---

**வடிவேல் சுரேஷுக்கு**

வடிவேல் சுரேஷுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

“மலையகத் தமிழ் மக்களை இலங்கைச் சமூகத்துடன் முழுமையாக ஒன்றிணைப்பதை மேற்பார்வையிடுதல் மற்றும் நுவரெலியா, பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகளை ஆராய்தல் ஆகிய பொறுப்புக்களும் அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அப்பணிகளையும் அவர் சிறப்பாக முன்னெடுப்பார் என நம்புகின்றேன்.”–என்றும்அமைச்சர்ஜீவன்தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

“மலையக அரசியல்வாதியாக, தொழிற்சங்கவாதியாகச் செயற்படும் எமது சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஜனாதிபதியால் இப்படியான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. அவரால் முன்னெடுக்கப்படும் பணிகளுக்கு எனது அமைச்சுப் பக்கத்தில் இருந்து ஏதேனும் ஆதரவு தேவைப்படும் பட்சத்தில், அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

---

**வடக்கு, கிழக்கில்...**

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சுக்கான செலவினத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

“புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு என்ற பெயரிலேயே அரசு வெளிப்படையாக புத்த மதம் மாத்திரம்தான் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட மதமாக இருப்பதாக ஏற்றுக்கொள்கின்றது. இலங்கையின் பூர்வீக மதமான இந்து மதம் கூட இந்த வரிசையில் வரவில்லை. ஆகவே, இலங்கையைப் பொறுத்தவரையில் புத்த மதத்துக்கு அப்பால்தான் ஏனைய மதங்கள் என்ற செய்தியை இந்தத் தலைப்பு சொல்லி நிற்கின்றது.

நான் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சென்றுள்ளேன். அங்குள்ள எம்மவர்களின் வீடுகளுக்கும் சென்றுள்ளேன். அங்கு கூட புத்த பகவானை அமைதியின் அடையாளமாக வைத்திருக்கின்றார்கள். இந்து, கத்தோலிக்க மதத்தவர்களும் அப்படித்தான் புத்தரை வைத்திருக்கின்றார்கள். ஆனால், இலங்கையில் புத்த பகவானை தற்போது இலங்கையில் உள்ள ஆட்சியாளர்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்று அமைச்சர் சிந்திக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் எங்களின் நிலங்களைப் பறிக்கின்ற, எங்களின் மத அடையாளங்களை அழிக்கின்ற ஆக்கிரமிப்பின் அடையாளமாக புத்த பகவானைப் பயன்படுத்த்துகின்றனர். வெளிப்படையாகக் கூறுவதானால் காணி பிடிப்பதற்கு புத்த பகவானைப் பயன்படுத்துகின்றனர். இது ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

பௌத்தத்தை, சிங்களவர்களை ஆள வேண்டுமென்ற எண்ணம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒருபோதும் இருந்தததில்லை. அவ்வாறு அவர்கள் செயற்பட்டதும் இல்லை. தங்களின் இன, மொழி, கலாசார அடையாளங்களுடன் வாழ வேண்டும் என்பதுதான் விடுதலைப் புலிகளின் கொள்கையாக இருந்தது.

இவ்வாறான நிலையில் முல்லைத் தீவு, வவுனியா மாவட்டங்களில் தொடர்ச்சியாக தமிழர்களின் இன விகிதாசாரத்தைக் குறைப்பதற்கு இனப் பரம்பல் பல்வேறுபட்ட விடயங்கள் ஊடாக நடக்கின்றது. உங்களின் அமைச்சின் கீழ் இருக்கின்ற ஒரு சில அதிகாரிகளும் அதற்கு உடந்தையாக இருக்கின்றார்கள். நாங்கள் தற்போது கேட்பது என்னவென்றால் இன, மத, மொழி அடையாளங்களுடன் எங்களின் பிரதேசங்களில் வாழ வேண்டும் என்பதுதான். எனவே இதனை நீங்கள் புரிந்து செயற்பட வேண்டும்.” – என்றார்.

---

**வவுனியாவில்...**

வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, ஓயார்சின்னக்குளம் பகுதிக்கு இரவு வாகனம் ஒன்றில் மது போதையில் சென்ற குழுவினர் அங்கு நின்ற இருவர் மீது துரத்தித் துரத்தி வாளால் வெட்டினர்.

இதனால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதலை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதற்கமைய வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






# புத்தளத்தில் புதையல் தோண்டிய நான்கு பேருக்கும் விளக்கமறியல்

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி – நுரைச்சோலை , ஆலங்குடா பகுதியில் நபர் ஒருவருக்கு சொந்தமான தோட்டத்தில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் எதிர் வரும் 11 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் ஏ.முஹம்மது சம்சுல் ராபி உத்தரவிட்டுள்ளார்.

அந்தத் தோட்டத்தின் காவலாளி உட்பட புதையல் தோண்டுவதற்கு உதவிய கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த மூவரும் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் எம்.எம்.இக்பாலுக்குச் சொந்தமான 25 ஏக்கர் தோட்டத்திலேயே இவ்வாறு புதையல் தோண்டப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தத் தோட்டத்தில் கடந்த 15 வருடங்களுக்கும் மேல் காவலாளியாக கடமைபுரிந்து வரும் சந்தேக நபர், அந்த தோட்டத்தில் குவேனி பாவித்ததாக கூறப்படும் செம்பு வகையைச் சேர்ந்த குடம் ஒன்று புதைத்து வைக்கப்பட் டுள்ளதாகவும் , அதனை தேடியே தோட் டத்தில் புதையல் தோண்டும் நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந் துள்ளது.



தோட்டக் காவலாளி உட்பட சந்தேக நபர்கள் நால்வரும் கடந்த சில நாள் களாக இரவு நேரங்களில் இவ்வாறு புதையல் தோண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதுபற்றித் தோட்டத்தின் உரிமை யாளரான புத்தளம் மாவட்ட பதில் நீதி வான் எம்.எம்.இக்பால் நுரைச்சோலை பொலிஸில் முறைப்பாட்டு ஒன்றை செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைய, நுரைச் சோலை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோ தகர் டபிள்யூ.எஸ். பிரேமசிறி தலை மையிலான பொலிஸ் குழு புதையல் தோண்டப்பட்டதாக கூறப்படும் தோட் டத்தை சுற்றிவளைத்ததுடன் , சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் ஏ.முஹம்மது சம்சுல் ராபி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.




# அட்டாளைச்சேனை கூட்டுறவுச் சங்கத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை

(கே. எ. ஹமீட்)

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்குக் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங் கங்களின் பதிவாளருமான என். மதிவண்ணனால் நியமிக்கப்பட்ட பணியாளர் சபையின் கூட்டம் இடம் பெற்றது.

இடைக்கால புதிய பணிப்பாளர் சபைக்கு தலைவராக நியமிக்கப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பீ.ரீ.ஆதம்பாவா தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

பணிப்பாள் சபை உறுப்பினர்களான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம்.நியாஸ், சிரேஷ்ட ஊடகவியலா ளர் எஸ்.எம்.அறூஸ் சங்கத்தின் செயலாளரும், பொது முகாமையாளரு மான எஸ்.எல். அல்.முனவ்வர், சங்கத் துக்குப் பொறுப்பான கூட்டுறவு அபி விருத்தி உத்தியோகத்தர் யூ.எல். முஹம்மட் பௌஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும், சங்கம் நீண்ட காலமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப் பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப் பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் அரசியல் பிரமுகர்களை சந்தித்து குறைபாடுகளை முன்வைத்து தீர்வுக ளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இரட்டை வேடத்தின் அர்த்தம்

''விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் நோக்கம் எனக்கு இல்லை. அதேவேளை, ராஜ பக்ஷக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் எனக்கு இல்லை.'' - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

மீனுக்குத் தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கின் போக்கில் அமைந்த தந்திரப் பேச்சு இது.

தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரின வாதிகளையும், தெற்கின் சிங்களத் தேசியவாதிகளை யும் அதேசமயம், தமிழ்த் தேசியவாதிகளையும் சமயோசிதமாக சமாளிக்கும் தந்திர எத்தனம் இது.

விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்யவோ அதற்கு உதவவோ வேண்டிய தேவை ஏதும் பௌத்த - சிங்களப் பேரினவாத குழாமைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை என்பது வெளிப்படையானது.

பாரம்பரியமான சிங்கள அரசியல் சமூக மேலடுக் குத் தட்டிலிருந்து வந்தவர் அவர். ஏறத்தாழ ஐம்பது ஆண்டு கால நாடாளுமன்ற அனுபவத்தைக் கொண்டவர். இலங்கை அரசியலில் 'கிழட்டு நரி' என மெச்சப்படும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெய வர்தனாவினால் தூக்கி வளர்க்கப்பட்ட அவரின் அரசியல் வாரிசு. இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த மிக மூத்த அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் முப்பது ஆண்டுகாலத் தலைவர்.

அத்தகையவர் இந்த நாட்டின் தலைவராக மக்களினால் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கிடைத்த வாய்ப்புகளைத் தகர்த்தவர்கள் விடுதலைப் புலிகள். 1999 இலும். பின்னர் 2005 இலும் தாம் கைக்கொண்ட இராணுவ, அரசியல் நடவடிக்கைகள் மூலம் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாகக் கிடைத்த சந்தர்ப்பங்களை அடியோடு குழப்பிய வர்கள் விடுதலைப் புலிகள்தான்.

1999 ஜனாதிபதி தேர்தல் சமயம் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் மேடைக்கு நெருக்கமாக பெரும் தற்கொலைக் குண்டு தாக்குதலை நடத்தி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கண் உட்பட பல அவயவங்களில் மோசமான காயங்களை ஏற்படுத்தி, அதன் மூலம் அவருக்குச் சார்பாக பெரும் அனுதாப அலைகளை தெற்கில் உருவாக்கி, ரணிலின் தோல்விக்குக் காரணமானார்கள் புலிகள்.

அதேபோல, 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களை வாக்களிக்க விடாது தடுத்தமை மூலம் அத்தேர்தலில் ரணிலின் தோல்வியை உறுதிப்படுத்தியவர்கள் புலிகள்தான்.

இதேபோன்று 2022 வரை ரணிலுக்குப் பெரும் அரசியல் வைரிகளாக இருந்து, ரணிலைத் தெற்கு அரசியலில் தலையெடுக்க விடாமல் அடி போட்டு வந்தவர்கள் ராஜபக்ஷக்கள்.

எனவே இந்த இரண்டு தரப்பினரில் எவரின் மீளுருவாக்கத்திற்கோ எழுச்சிக்கோ உதவ வேண்டுமென்ற தேவை - நோக்கம் - இலக்கு - ரணிலுக்கு இருக்கப் போவதில்லை என்பது தெளிவு.

ஆனாலும், தமது அரசியல் பதவி நிலை அதிகாரத்தில் தாம் தொடர்ந்து நீடிப்பதற்கு இந்த இரண்டு விடயங்களையும் கையாள்பவர் போல சில தரப்புகளுக்கு காட்ட வேண்டிய கட்டாயம் அவருக்கு உள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பில் தாம் வெளிப்படுத்தக்கூடிய கடும் சிங்களப் பேரினவாதப் போக்கு புலிகள் மீது பற்றும் பாசமும் கொண்ட தமிழ் வாக்காளர்களை தன்னிலிருந்து தூர வைத்து விடச் செய்து விடும் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும்.

அதேபோல, இப்போது நாடாளுமன்றத்தைத் தொடர்ந்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்ப தற்கும், வரக்கூடிய அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தாம் வெற்றி பெறுவதற்கான ஆதரவைத் தீவிரப் போக்குடைய பௌத்த, சிங்கள வாக்காளர்கள் மத்தியில் பேணுவதற்கும், ராஜபக்ஷகளைப் போஷித்துப் பாதுகாப்பது ரனிலுக்குள்ள மற்றைய கட்டாயமாகும்.

இந்த அரசியல் அழுத்தங்கள் காரணமாக அவர் வழமை போல அரசியலில் இரட்டை வேடம் போடுகின்றார். அதன் வெளிப்பாடான அறிவிப் புத்தான் புலிகளை மீளுருவாகம் செய்யவோ, ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கவோ வேண்டிய தேவை தனக்கு இல்லை என ரணில் தற்போது வெளிப்படுத்தும் கருத்தாகும்.

# மனித உரிமை தின வாரம் குச்சவெளியில் அனுஷ்டிப்பு

( ஹஸ்பர் )

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏ.எச். ஆர்.சி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் குச்சவெளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சிவில் அமைப்பினரால் குச்சவெளி பிரதேச சபை மண்டபத்தில் நேற்று (06) புதன்கிழமை காலை மனித உரிமைகள் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.





நிகழ்வில் சிவில் செயற்பாட்டாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மற்றும் ஏ.எச். ஆர்.சி. நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏ.எச். ஆர்.சி. நிறுவன சிவில் செயற்பாட்டாளர்களால் டிசெம்பர் 04 ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை மனித உரிமைகள் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.



# சாதாரண தர மாணவர்கள் கல்முனையில் கௌரவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை வலய அல் – பஹ்ரியா மகா வித்தியாலயத்தில் 2022 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுப் பாடசாலைக்கும் கல்முனை வலயத்துக்கும் பெருமை சேர்த்து சாதனை புரிந்த மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் வாழ்த்தி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்கள், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் பாராட்டி கௌரவித்தனர்.



# அதிபரை மாற்றுமாறு கோரி பெற்றோர்கள் போராட்டம்!

(ஹஸ்பர்)

திருகோணமலை கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட நீல பொல வித்தியாலயம் முன்பாக பெற்றார்கள் ஒன்றிணைந்து அந்தப் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர்களை மாற்றுமாறு கோரி கவனவீர்ப்புப் போராட்டத்தில் இன்று (07) ஈடுபட்டனர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டமானது பாடசாலைக்கு முன்பாக இடம் பெற்றது.

இரு மாணவர்களைத் தாக்கியமை தொடர்பில் அதிபர்களை நீக்க கோரி இந்த கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

தங்களது அதிகாரங்களை பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்து மாணவர்களை தாக்குவது கண்டிக்கத்தக்கது. இதனை கண்டிக்கிறோம். இவர்கள் தகுதியற்றவர்கள் என கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதில் பல பெற்றார்கள் பதாகைகளை ஏந்தியவாறு கலந்து கொண்டனர்.





# சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பம்

(மஸ்கெலியா நிருபர் )

எதிர்வரும் 26 ஆம் திகதி பௌர்ணமி நாளில் சிவனொளிபாதமலைக்கு பருவ காலம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் மின்சார சபையின் ஊழியர்கள் நல்லதண்ணி நகரில் இருந்து சிவனொளிபாதமலை உச்சி வரை மின் இணைப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதே போல் தேசிய நீர் வடிகால் திணைக்களம் சுத்தமான குடி தண்ணீர் வழங்கும் பணிகளைச் செய்து வருகின்றது.

நல்லதண்ணி நகரில் இருந்து சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பிரதான சாலையில் தற்காலிக வர்த்தக நிலையங்கள் அமைக்கும் பணியில் வர்த்தகர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

வன பாதுகாப்பு அதிகாரிகள் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் சற்று மழை ஓய்ந்துள்ளதால் ஏனைய விளம்பரங்கள் செய்யும் நிறுவனங்கள் தங்களது விளம்பர பதாகைகள் தொங்கவிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

யாத்திரிகர்கள் நலன் கருதி சகல வசதிகளும் செய்து கொடுக்க மஸ்கெலியா பிரதேச சபை முன் வந்துள்ளது.

ஹட்டன் அரச பஸ் நிலைய அதிகாரிகள் நல்லதண்ணி நகரில் பயணிகள் நலன் கருதித் தரிப்பிட வசதிகள் செய்துள்ளனர்.

பாதுகாப்பு நலன் கருதி நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர, மலைக்கு செல்லும் வழியில் உள்ள ஊசி மலை, சீத்த கங்குல பொலிஸ் நிலையங்கள் இரண்டையும் திருத்தம் செய்யப் பணித்துள்ளார்.



# பட்டிருப்புப் பிரதேச மாணவர்களுக்கு மனிதவள மேம்பாட்டுச் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய உயர்தர கணித, விஞ்ஞான ,தொழில்நுட்ப மாணவர்களுக்கு கிழக்கு பிராந்திய சத்தியசாயி சர்வதேச நிறுவனத்தால் மனிதவள மேம்பாட்டுச் செயலமர்வு கடந்த திங்கட்கிழமை (4) நடத்தப்பட்டது.

நிறுவனத்தின் இணைப்பாளர் செல்வி கே.கமலாதேவி தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் நிறுவனத்தின் கிழக்குப் பிராந்திய தலைவர் ஏ.டி.கஜன்குமார், த.தேவானந்தம், சுபா சக்கரவர்த்தி, அருள்நந்தி தவமணிதேவி, ஜெகநாதன் ரதிதேவி ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விரிவுரைகளை நிகழ்த்தினர்.



நிறுவனத்தின் கிழக்குப் பிராந்திய செயலாளர் பீ.விஜயகுமார், முன்னாள் இணைப்புக் குழுத் தலைவர் ஜெகநாதன், பாடசாலை அதிபர் தி.பார்த்தீபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சேவை நலன் பாராட்டு விழா!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மட்டக்களப்பு பட்டியிருப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பட்டியிருப்பு கல்முந்தல் திருவள்ளுவர் பாடசாலையில் 32 வருடங்கள் ஆசிரிய சேவையிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்ற சந்திரேஸ்வரி மகேந்திரராஜாவின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு களுதாவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு இராமகிருஷ்ண வித்தியாலயத்திலும் இடைநிலை மற்றும் உயர் கல்வியை மட்டக்களப்பு களுதாவளை மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

1991ம் ஆண்டு பேராதெனிய பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த இவர் 1993 ஆம் ஆண்டு பட்டதாரி நியமனம் ஊடாக ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்டார்.

1993 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டுவரை பட்டியிருப்பு மகிளூர் சரஸ்வதி மகா வித்தியாலத்தில் கடமையாற்றிய இவர் 2004 ஆம் ஆண்டு மட்டக்களப்பு களுதாவளை மகா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்று சென்றார்.

அங்கு தொடர்ச்சியாக 9 வருடங்கள் சேவையாற்றிய இவர் அங்கிருந்து பட்டியிருப்பு கல்முந்தல் திருவள்ளுவர் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கு தொடர்ச்சியாகப் 11 வருடங்கள் சேவையாற்றிய இவர் தனது 60 வயதில் அண்மையில் ஓய்வுபெற்றார்.

ஆசிரியர் சேவையில் 31 வருட கால சேவையைப் பூர்த்தி செய்து அண்மையில் ஓய்வு பெற்ற இவரைப் பட்டியிருப்பு கல்முந்தல் திருவள்ளுவர் பாடசாலை கல்விச் சமூகத்தினர் பாராட்டிக் கௌரவித்தனர்.



# பாடசாலைகளில் பாழுடைந்த கட்டடங்களது விவரம் திரட்டல்

திருகோணமலை – சேருநுவர சோமாதேவி வித்தியாலயத்தில் சில கட்டடங்கள் பாழடைந்துள்ளன என்று சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அத்துடன் வகுப்பறைகளுக்குள் உள்ள எறும்பு புற்றுகளில் பாம்புகள் கூட தஞ்சம் அடைந்துள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலையில் சுமார் 300 மாணவர்கள் ஆபத்தில் உள்ளனர். இது தொடர்பில் கல்வி அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பாழடைந்த கட்டடங்களைக் கொண்ட பாடசாலைகளில் இருந்து டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் மதிப்பீடுகளை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்துக்குள் அவற்றைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.





# பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான செயற்பாட்டு நிகழ்வு!

(த.சுபேசன்)

'பிறிஜ் செயற்றிட்டத்தின் கீழ் ஊராட்சி முற்றம் மற்றும் பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்பாட்டு நிகழ்வு செவ்வாய்க்கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான மற்றும் பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களினூடாக தாங்குதிறன் மிக்க சமூகங்களை மேம்படுத்தும் செயற்பாட்டு நிகழ்வில், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் உதவிச் செயலாளர்கள், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர், வடக்கு மாகாண உதவிப் பிரதம செயலாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிறிசலிஸ் நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பிறிஜ் திட்டத்தின் நோக்கம் மற்றும் ஆய்வுத் தரவுத் திரட்டல் தொடர்பான விளக்கத்தை கிறிசலிஸ் நிறுவன ஆலோசகர் புலேந்திரன் தர்மேந்திராவும்,

ஊராட்சி முற்ற எண்ணக்கருவின் அறிமுகம் தொடர்பான விளக்கத்தை கிறிசலிஸ் நிறுவன திட்ட முகாமையாளர் ம.பிரபாகரனும்,

மக்கள் மன்றத்தின் எண்ணக்கருவும்-கிராம மட்டத்தில் அதன் பிரதிபலிப்பு எனும் கருப்பொருளில் வடக்கு மாகாண உதவிப் பிரதம செயலாளர் அனேனட் நின்துஷாவும்,

ஊராட்சி முற்றத்துக்கான வழிகாட்டல் மற்றும் செயற்றிட்டம் தயாரித்தல் தொடர்பான விளக்கத்தை சமூக பொருளாதார ஆலோசகர் செல்வின் இரணியஸூம், பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்திட்டம் தொடர்பாக கிறிசலிஸ் நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் டோல்ரன் பிரகாஷூம் கருத்துரைத்திருந்தனர்.

நிகழ்வில் விசேட அம்சமாக வடக்கு மாகாணத்தில் பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளும் அதனை தடுப்பதற்கான பொறிமுறை உருவாக்கம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.





# சிங்கள மொழி தினப் போட்டி வெற்றியாளருக்குச் சான்றிதழ்

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய மட்டத்தில் இடம்பெற்ற இரண்டாம் தேசிய மொழிப் (சிங்களம்) போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வலய சிங்களப் பாடத்துக்கான வளவாளர் ஏ.எச்.நாஸிக் அஹ்மத் தலைமையில் நேற்று (6) புதன்கிழமை சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

சிங்கள மொழிதினப் போட்டியில் பேச்சு, வாசிப்பு, மொழிப்பிரயோகமும் கிரகித்தலும் மற்றும் நாட்டார் குழுப்பாடல் போன்ற போட்டிகளில் பங்குபற்றி முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.எம்.எம்.எஸ் உமர் மௌலானா பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.



இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்) பீ.எம். வை.அரபாத் , பிரதிக் கல்வி பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) ஏ.எல்.அப்துல் மஜீது , பிரதிக்கல்வி பணிப்பாளர் (திட்டமிடல்) ஏ.சி.நுஸ்ரத் நிலோபரா, சம்மாந்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் , நாவிதன் வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் பீ.பரமதயாளன் மற்றும் சம்மாந்துறை வலயக் கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் பங்குபற்றினர்.

# கற்றல் செயல்பாட்டு மையம் ஆரம்பம்



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டம் மாவடிச்சேனை வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தில் ஏடு ஐக்கிய இராச்சியத்தின் அனுசரணையுடன் விசேட கற்றல் செயல்பாட்டு மையம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் மூலம் இந்தப் பாடசாலையில் இருந்தும், அண்மித்த பாடசாலைகளில் இருந்தும் க.பொ.த. சாதாரணதர, உயர்தர, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளுக்காக மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.







# சிறையிலும் வாடாத கறுப்பு மலர் நெல்சன் மண்டேலா...!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

**(நெல்சன் மண்டேலா மறைந்து பத்து வருடங்கள் கழிந்துள்ளன. நினைவு தினத்தை அடுத்து (5.12.2013) இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது)**

அணுத்துகள் ஒன்றுக்கு அவரது பெயரைச் சூட்டியிக்கிறார்கள். ஆனால் அவர் பௌதிக விஞ்ஞானி அல்லர். வெள்ளையரின் தலைநாடான பிரிட்டனின் தலைநகர் லண்டனில் அவருக்குச் சிலை வைத்துள்ளனர். ஆனால் அவர் வெள்ளையர் அல்லர். கறுப்பர் வெள்ளை நிற வெறிக்குப் பரமவைரி.

**போராட்டமே வாழ்க்கை**

எத்தனையோ பல்கலைக் கழகங்கள் அவருக்குச் சிறப்புப் பட்டங்களை வழங்கித் தம்மை சிறப்பித்துக் கொள்கின்றன. ஆனால் அவர் 'போராட்டமே என் வாழ்க்கை' என்று பறைசாற்றி விடுதலைப் போர் வீரர் என்ற நிகரிலாப் பட்டத்தை தமதாக்கிக் கொண்டவர்.

உலகின் பல்வேறு நகரங்கள் அவருக்குச் சிறப்புக் குடியுரிமை வழங்கியுள்ளன, ஆனால் அவரது தாய் நாட்டில் எந்த உரிமையும் அவருக்கு இருக்கவில்லை.

உலகெங்கும் எத்தனையோ தெருக்களுக்கு அவரது பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். ஆனால் அவர் சுதந்திர மனிதராய்த் தென்னாபிரிக்கத் தெருவில் நடக்காது, சிறையில் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக இருந்தார்.

தென்னாபிரிக்க மக்களின் அன்புத் தலைவர் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகளாய் (1989 வரை) சிறையில் கைதியாய் இருந்தார். தென் னாபிரிக்க வெள்ளை நிறவெறி அரசு அவரை இவ்வளவு நீண்ட காலம் சிறையில் அடைத்து வைத்துப் புரிந்துள்ள சாதனை அதுதான்.

நெல்சன் மண்டேலா என்பது தென்னாபிரிக்க மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தின் மறுபெயராகி விட்டது. அவரது மக்கள் அவருக்குச் சூட்டிள்ள அபிமானப் பெயர் சிறையிலும் வாடாத கறுப்புமலர். ஆண்டுகள் பல ஆன பின்பும் வாடாமல் போராட்ட மணம் வீசிக் கொண்டிருக்கும் ஒரு கறுப்புமலர், சிறையிலும் வாடாத கறுப்பு மலர்.

சரித்திரம் படைத்த உரிமைக்குரல்

மண்டேலாவின் முழுப் பெயர் 'நெல்சன் ரோலி ஹாலா மண்டேலா' 1918 ஜுலை 18 இல் தென்ஆபிரிக்காவின் டிரான்ஸ்காய் பகுதியில் அம்தட்டா எனும் ஊரில் கோசா பழங்குடியினரின் தெம்பு அரச குடும்பத்தில் பிறந்தவர் இவர்.

முதல் உலகப்போர் முடிவுக்கு வந்த 1918 ஆம் ஆண்டில், உலகக்குத் தனது அழுகுரலைப் பதிவு செய்தது ஒரு குழந்தை. பிறக்கும்போது எல்லாக் குழந்தைகளும் எழுப்பும் சாதாரண அழுகுரல் என்பதால் அது வியப்பதற்கில்லை. ஆனால், அந்தக் குரல்தான் பின்னாள்களில், தென்னாப்பிரிக்காவின் சரித்திரம் படைத்த உரிமைக் குரலாக ஓங்கி ஒலித்தது.

9 வயதில் தன் தந்தையை இழந்த அந்த சிறுவன், ஆடுமேய்த்துக் கொண்டே படிக்கிறான். 'சோசா' பழங்குடி இனத்தைச் சேர்ந்த அந்த சிறுவன்தான், அவன் குடும்பத்திலேயே முதன் முதலில் பள்ளிக்குச் சென்றவன். ஒரு கையில் ஆடு மேய்க்கும் குச்சி, இன்னொரு கையில் படிக்கும் பாடப் புத்தகம் என பள்ளிப்பருவத்தைக் கடந்தவனால், அவனது கல்லூரிப் பருவத்தை எளிதாகக் கடக்க முடியவில்லை. காரணம், புறச்சூழல் அவனுக்கு வேறொரு பாடத்தை, வலியக் கற்றுக் கொடுத்தது. அது நிறவெறி கொண்ட வெள்ளையர்களால், பூர்வகுடி கறுப்பின மக்களுக்கு நடத்தப்பட்ட 'அடிமைப் பாடம்' !

**ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்**

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம் நீண்ட நெடுங்காலமாக நடை பெற்றது.

கறுப்பின மக்களின் உரிமை அடக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்படும் மிகக் கேவல நிலையை நீக்கி 1912 ஜனவரி 8 இல் ஆபிரிக்க தேசியக் காங் கிரஸ் உதித்தது. இதன் பயனாகக் கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம் உத்வேகமானது.

தென்னாபிரிக்காவின் பெரும்பான்மையான பூர்வகுடி கருப்பின மக்களை, பிரிட்டிஷ், பிரான்ஸ், டச்சு உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடியேறிய சிறுபான்மை வெள்ளையர்கள் அடிமை செய்து ஆளத்தொடங்கினர்.

தென்னாப்பிரிக்காவின் கறுப்பின மக்கள், தங்கள் தாய் மண்ணிலேயே சொந்தமாக நிலம் வைத்துக்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டனர். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டனர். ஒரே நாட்டுக்குள் பயணிக்க வெள்ளையர்கள் எங்களின் அனுமதியும், பாஸ்போர்ட் உரிமமும் கொண்டிருக்க வேண்டும் எனக் கண்டிக்கப்பட்டனர். உச்சபட்சமாக வாக்களிக்கும் உரிமை கூடப் பறிக்கப்பட்டு, உள்நாட்டு அகதிகளாக நடத்தப்பட்டனர். கொத்தடிமைகளாகச் சுரங்கப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பல நூறு ஆண்டுகளாக அடிமைகளாக வாழ்ந்த கறுப்பின மக்கள் புதிய விடியலை நோக்கிய பாதைக்கு வழி சமைத்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கு முழுமையான ஆதரவை வழங்கினர். நிற வெறியை எதிர்த்து மக்களின் போராட்டம் முனைப்படைந்தது.

சுரண்டற்கார, நிறவெறித் தென்னாபிரிக்க அரசு ஆபிரிக்க தேசிய காங்கிரஸை அழிக்க முனைந்தது. ஆயினும் ஒரு சிலரைத்தான் கைது செய்ய முடிந்தது. மக்களின் அமைப்பு மக்களுடனேயே இருந்து போராடியது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சிறையிலும் வாடாத கறுப்பு மலர் நெல்சன் மண்டேலா...!

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கத்தில் அறப்போர் (வன்முறையற்ற) வழியில் நம்பிக்கை கொண்டிருந்த இவர், பிறகு ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ராணுவப் பிரிவுக்குத் தலைமை தாங்கினார். இவர்கள் மரபுசாரா கொரில்லாப் போர் முறைத் தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத்தினர். மண்டேலாவின் 27 ஆண்டு சிறைவாசம், நிறவெறிக் கொடுமையின் பரவலாக அறியப்பட்ட சாட்சியமாக விளங்குகிறது.

**மகத்தான மக்கள் தலைவன்**

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கிய தலைவராக விளங்கிய நெல்சன் மண்டேலா மக்கள் மத்தியில் பிரபலமானார். எதிரிகள் கூட நெல்சன் மண்டேலாவை மதித்தனர். அன்பால் எதனையும் சாதிக்கக் கூடிய மகத்தான மக்கள் தலைவரானார் மண்டேலா.

நிறவெறி அரசு நெல்சன் மண்டேலாவை அழிப்பதால் கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கலாம் என எண்ணியது. தேச விரோத வழக்கில் நெல்சன் மண்டேலாவை மாட்டிய அரசு குற்றவாளிக் கூண்டினுள் வைத்து விடுதலைப் போராட்டத்தைப் பேரம் பேசியது.

ஆயினும் சிறையின் பெரும்பாலான காலத்தை இவர் ராபன் தீவில் சிறிய சிறை அறையில் கழித்தார். இன ஒதுக்கல் அரசின் குற்றவாளிக் கூண்டினுள் நிறுத்தப் பட்டு 27 ஆண்டுகளாக இருட் டுச் சிறைக் குள்ளேயே தன் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

நான் இன வெறியன் அல்லன் இன வெறியை அடியோடு வெறுப்பவன். இனவெறி கறுப்பரிடமிருந்தாலென்ன, வெள்ளையரி மிருந்தாலென்ன, அது அநாகரிகமானது. அருவருக்கத்தக்கது

இத்தனையாண்டு சிறை வாசத்தின் பின்னரும் தன் சுயநலத்துக்காகத் தேச விடுதலைப் 'போராட்டத்தை நெல்சன் மண்டேலா கைவிடவில்லை. எதற்கும் அஞ்சாத புரட்சிச் சிங்க மாய் நிறவெறி அரசை எதிர்த்தார், குற்றவாளிக் கூண்டினுள் நிறுத்தப்பட்ட நெல்சன் மண்டேலா அரசுக் கெதிராகப் போர்க் கணை தொடுத்தார்.

இனவெறியை முற்று முழுதாக எதிர்த்து நின்ற மண்டேலா இருட்டுக் குகையான சிறைக்குள் தள்ளப்பட்டார்.

விடுதலை... விடுதலை... என்ற பெயரில் பேரம் பேசும் நிற வெறியாளர்களுக்கு துளியேனும் மசியாது தனது கையில் இலட்சியத்தில் உறுதியாக நின்றார். சிறையிலும் வாடாத கறுப்பு மலர் தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளை மறந்து மக்களுக் காகத் தான் போராடுவதையிட்டு மகிழ்ச்சியடை கிறது என அவர் இருட்டுச் சிறையி னுள்ளே ஆற்றிய உரையிருந்து காணலாம்.

எனது காலம் திரும்பி வருமானால் இதுவரை செய்ததையே மீண்டும் செய்வேன். தன்னை மனிதன் என்று அழைக்கிற எவனும் நிறவெறியருகெதிராகவே செயற்படுவான். எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும், கறுப்பு மலர் விடுதலைப் போராட்ட மணம் வீசிக்கொண்டே இருக்கும்.

1990 இல் அவரது விடுதலைக்கு பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாபிரிக்கக் குடியரசு மலர்ந்தது. மண்டேலா, உலகில் அதிகம் மதிக்கப் படும் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். மண்டேலா, இனவெறி ஆட்சியில் ஊறிக்கிடந்த தென்னாபிரிக்காவை மக்களாட்சியின் மிளிர்வுக்கு இட்டுச் சென்றவர்.

தென்னாபிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவர் ஆவார். அதற்கு முன்னர் நிறவெறிக்கு எதிராகப் போராடிய முக்கிய தலைவர்களுள் ஒருவராக இருந்தார்.

அமைதி வழிப் போராளியாக, ஆயுதப் போராட்டத் தலைவனாக, தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியாக, 27 ஆண்டுகள் சிறையில் வாடி பின்னர் விடுதலையாகி குடியரசு தலைவராக, அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவராக இவரின் அரசியல் பயணம் தொடர்ந்தது. சூன் 2008 இல் பொது வாழ்க்கையிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

# டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலை வைத்திருந்தால் சட்ட நடவடிக்கை!

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

**( எம்.எம்.ஜெஸ்மின்)**

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் இடைவிட்ட மழை காரணமாக தேங்கி நிற்கும் நீர் மூலம் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன. இந்த நிலையில் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழலை வைத்திருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

வீடுகள், பாடசாலைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வெற்று வளவுகள், மதஸ்தலங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொதுச் சந்தைகள் போன்ற இடங்களில் மழை நீர் தேங்கிக் காணப்படுகிறது



டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கக்கூடும்.எனவே பொது மக்கள் இவ்வாறான இடங்களை அடையாளம் கண்டு நீர் தேங்கி நிற்கும் சூழலை இல்லாதொழிக்க வேண்டும். குப்பை கூளங்களைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் வளாகத்தில் நீர் தேங்கி நிற்பதால் சிரமதானம் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாடசாலை அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

வீடு வீடாகப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தற்போது பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதனையும் மீறி டெங்கு நுளம்புகள் பரவும் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றார்.

# இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறலுக்கு நிரந்தர தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் அறிக்கை



"இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறலுக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கைது செய்யப்பட்டுள்ள 17 மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும்." - இவ்வாறு பா.ம.க. நிறுவனர் ராம தாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,

"வங்கக்கடலில் மீன் பிடிக்கச் சென்ற புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த 9 மீனவர்களும், இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களும் அவர்களுக்கு சொந்தமான 3 விசைப்படகுகளுடன் சிங்களக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரின் இந்த அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறலுக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்போது கைது செய்யப்பட்டுள்ள 17 மீனவர்களையும், இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ள அனைத்து படகுகளையும் மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்,"என்று தெரிவித்துள்ளார்.

# சென்னையில் பல்வேறு இடங்களில் மழைநீரை அகற்றக் கோரி போராட்டம்

கனமழையால் சென்னை மாநகரே வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. பெரும்பாலான இடங்களில் மழைநீர் அகற்றப்பட்டாலும், இன்னும் பல இடங்களில் முழங்கால் அளவுக்கு மேல் தண்ணீர் தேங்கி நிற்கிறது.

இந்த நிலையில், வீடுகளுக்குள் புகுந்த மழைநீரை அகற்றக் கோரியும், மின் இணைப்பு, உணவு வழங்கக் கோரியும் சென்னையின் பல இடங்களில் நேற்று முன்தினம் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் தொடர்ச்சியாக, நேற்றும் பல இடங்களில் போராட்டம் இடம்பெற்றது. அந்த வகையில், வியாசர்பாடியில் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்குள் மழைநீர் புகுந்து, 3 நாட்களாக அதை அகற்ற அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக்கூறி, நேற்று வியாசர்பாடி கல்யாணபுரம் பகுதியில் மக்கள் மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது, அந்த வழியாக வந்த மாநகர பேருந்து மீது அப்பகுதி மக்கள் கற்களை வீசினர். இதனால், பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்தது. உடனே சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், பொதுமக்களிடம் பேச்சு நடத்தி கலைந்து போகச்செய்தனர். பேருந்து கண்ணாடி உடைக்கப்பட்டது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.




இதேபோல், வண்ணாரப்பேட்டையில் மழைநீர் அகற்றப்படாமல் இருந்ததைக் கண்டித்து கல்லறை சாலை, லாலாகுண்டா, சீனிவாசபுரம், கோஜரா ஜநகர் பகுதி மக்கள் நேற்று கல்லறை சாலையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, அந்த பகுதிக்கு ஆய்வுக்கு சென்ற அமைச்சர் சேகர்பாபுவை முற்றுகையிட்ட மக்கள், தண்ணீரை உடனடியாக அகற்றி, மின்சார இணைப்பைக் கொடுக்கவேண்டும் என வலியுறுத்தினர்.

மழைநீர் அகற்றப்பட்டு, மின்சாரம் வழங்கப்படும் என அமைச்சர் உறுதிய ளித்ததையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.

இதேபோல், திருவான்மியூர் சந்திப்பு உட்பட பல இடங்களில் 2 ஆவது நாளாக நேற்றும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மயிலாப்பூர் வீதியின், 4 புறங்களிலும் வாகனங்களை அனுமதிக்காமல் பி.எஸ்.சிவசாமி சாலை பகுதி மக்கள் 2 ஆவது முறையாக நேற்று இரவும் மறியலில் ஈடுபட்டனர்.

மின்சாரம் இல்லை. குடிநீர் கிடைக்கவில்லை. வீடுகளுக்குள் கழிவு நீர் தேங்கியுள்ளது. வெள்ளநீரை வெளியேற்ற ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் புகார் தெரிவித்தனர்.

# காசாவில் மனிதாபிமான அமைப்பு வீழ்ச்சியடையக்கூடும்!

## - ஐ.நா. பொதுச்செயலாளர் தெரிவிப்பு





காசாவில் மனிதாபிமான அமைப்பு வீழ்ச்சியடையக்கூடும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் தெரிவித்துள்ளார்.

காசா மீது இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல்களை நடாத்தி வரும் நிலையில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், பொது ஒழுங்கு முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மக்களிடையே தொற்று நோய்கள் பரவுவதற்கான சாத்தியம் நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் ஏனைய நாடுகளுக்கு பாதுகாப்பு கோரி செல்வதும் தற்போது அதிகரித்து வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காசாவின் தெற்கு பகுதியில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவின் தெற்கு பகுதி மீது இஸ்ரேல் தொடர் தாக்குதல்களை நடத்தி வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், குறித்த பகுதியில் இருந்து 25 சதவீதமானோர் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலையில் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, காசாவுக்கு எரிபொருள்களை கொண்டுவருவதற்கு இஸ்ரேல் அனுமதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட கொரிய பெண்கள் அதிகளவான குழந்தைகளை பெற்றெடுக்க வேண்டும்!

## - கண்ணீர் சிந்தினார் அதிபர் கிம் ஜங் உன்

வடகொரிய நாட்டை அதிபர் கிம்ஜாங் உன் சர்வாதிகாரி போல் ஆட்சி செய்து வருகிறார் என புகார்கள் வெளியாகி உள்ளன. வல்லரசான அமெரிக்காவை எதிர்க்க பல்வேறு நாடுகள் பயந்து வரும் நிலையில் கிம்ஜாங் உன், அந்த நாட்டின் அச்சுறுத்தல்களுக்கு எப்போதும் பயப்படுவது இல்லை.

இந்த நிலையில் பியாங்யாங் நகரில் நடைபெற்ற பெண்களுக்கான மேம்பாட்டு நிகழ்ச்சியில் அதிபர் கிம் ஜாங் உன் உரையாற்றுகையில்,

நமது நாட்டில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. இதனால் பெண்கள் அதிக குழந்தைகளை பெற்று கொள்ள வேண்டும். அதுதான் நம் நாட்டை பாதுகாக்கும். குழந்தைகளை பராமரித்து நன்றாக வளர்க்க வேண்டும். முறையாக கல்வி வழங்க வேண்டும். இதனை செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

சமீபகாலமாக அதிகரித்து வரும் சோஷலிசமற்ற பழக்க வழக்கங்களை ஒழித்து, குடும்ப நல்லிணக்கம், சமூக ஒற்றுமையை மேம்படுத்த வேண்டும். அதன் மூலம்பண்பாடு, ஒழுக்கம் நிறைந்த வாழ்வுக்கான சிறந்த வழியை உருவாக்க வேண்டும். ஒருவருக்கு ஒருவர் உதவி, முன்னோக்கிச் செல்வதும் அவசியம். எனவே, குழந்தைகளை நன்றாக கவனித்துஅவர்களுக்குத் தேவையான கல்விவசதிகளை ஏற்படுத்தித் தருவதே நமது முக்கியக் கடமையாகும்." - என்றார்.



இப்படி அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே மேடையில் அவர் கண்ணீர் விட்டு அழுதார். பின்னர், அவர் தனது கையில் இருந்த கைக்குட்டையை எடுத்து கண்ணீரை துடைத்துத் கொண்டார். இதுதொடர்பான வீடியோ தற்போது இணையத்தில் வெளியாகி வேகமாக பரவி வருகிறது.